முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாள் புதன்கிழமை

**E.A.No.02/2025**

in

**E.P.No.41/2014**

**in**

**O.S.No.123/2009**

தி.ரத்தினம் ...மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. மா.மாணிக்கம் (இறப்பு) ... 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி
2. அமுதா
3. கார்த்திகா (எ) களஞ்சியம் (இறப்பு)
4. கிருஷ்ணசாமி
5. மாடசாமி ... 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகள்

இம்மனுவானது 21.01.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1வது, 3வது எதிர்மனுதாரர்கள் காலம்சென்று விட்ட நிலையிலும், 2வது எதிர்மனுதாரர் நிறைவேற்றுதல் மனுவில் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், 4 மற்றும் 5வது எதிர்மனுதாரர்களுக்கு செய்தித்தாள் மூலமாக அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 26.09.2025 அன்று இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.21 17:58:35 +0530

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 32 விதி 12 மற்றும் பிரிவு 151–ன்படி, E.P.No.41/2014 மனுவில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் 18 வயதிற்கு மேல் ஆகி மேஜர் ஆகிவிட்டதால் மேற்படி 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை மேஜர் என தீர்மானித்துக்கொள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்** :–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், நிறைவேறுதல் மனு நிலுவையில் இருக்கும்போது இறந்துபோன 1ம் எதிர்மனுதாரருக்கு மனைவியான 2ம் எதிர்மனுதாரரும், மக்களான 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக E.P.No.41/2014 மனுவில் கட்சி சேர்த்துக் கொள்ள E.A.No.157/2016 மனுவும் மற்றும் மைனர்களுக்கு கார்டியன் நியமனம் செய்ய E.A.No.158/2016 மனுவும் தாக்கல் செய்திருந்ததாகவும், மேற்படி மனுக்கள் அனுமதிக்கப்பட்டு E.P.No.41/2014 மனுவை நடத்திவந்த நிலையில், தற்போது 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் 18 வயதிற்கு மேல்ஆகி மேஜர் ஆகிவிட்டார்கள் என்றும், எனவே, மேற்படி 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை மேஜர் என தீர்மானித்துக்கொள்ள இம்மனுவை அனுமதித்து கொள்ளவேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்றும், இல்லாதுபோனால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடக்கூடியதாக இருக்கிறது என்றும், ஆகையால், E.P.No.41/2014 மனுவில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் 18 வயதிற்கு மேல் ஆகி மேஜர் ஆகிவிட்டதால் மேற்படி 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை மேஜர் என தீர்மானித்துக்கொள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் 2வது எதிர்மனுதாரர் E.P.No.41/2014 மனுவில் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார். 4, 5 எதிர்மனுதாரர்கள் இம்மனுவில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.21 17:58:42 +0530

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது E.P.No.41/2014 மனுவில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் 18 வயதிற்கு மேல் ஆகி மேஜர் ஆகிவிட்டதால் மேற்படி 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை மேஜர் என தீர்மானித்துக்கொள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மேற்படி 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் 18 வயதிற்கு மேல் ஆகி மேஜர் ஆகிவிட்டதால் E.P.No.41/2014 மனுவில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை மேஜர் என தீர்மானித்துக்கொள்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டம் ஏற்படப்போவதில்லை. மேலும், இம்மனுவிற்கு ஆட்சேபணை செய்யாமல் 4, 5 எதிர்மனுதாரர்கள் இம்மனுவில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாகியுள்ளனர்.

7) மேலும், இம்மனுவில் 3வது எதிர்மனுதாரர் 10.01.2020 அன்று இறந்துவிட்டார் என அறிவிப்பு திரும்ப 12.09.2025ல் வந்துவிட்ட நிலையில், இறந்துபோன 3ம் எதிர்மனுதாரருக்கு E.A.No.04/2025ன் உத்தேச 6ம் எதிர்மனுதாரரான அவரின் கணவரை கட்சி சேர்க்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மேற்படி மனுவானது இன்று இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

8) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.21 17:58:50 +0530

9) **<u>இறுதியாக:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.01.21
17:58:55 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

– இல்லை –

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.01.21
17:59:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

முு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
E.A.No.02/2025
in
E.P.No.41/2014
in
O.S.No.123/2009

உத்தரவு (Draft / Fair)
நாள் : 21.01.2026